'பார்ட்-டைம்' ஆக வருகிற டாக்டர்கள் சிலரும் இருப்பதாக நான் பேசுகிறபோது தெரிந்துகொண்டேன். இராயப்பேட்டை மருத்துவ மனையிலிருந்து வருவதாக இயக்குநர் அவர்கள் தெரிவித்தார்கள். பார்ட்-டைமாக வருகிறவர்கள் புற நோயாளிகளைக் கவனிப்பதற்குத்தான் வருவார்கள். அப்படி இல்லையானல் மேலும் என்ன செய்யலாம் என்பதைப்பற்றி ஆலோசிக்கப்படும்.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவர் அவர்களே, சைதை பக்கத்திலே அமைந்திருக்கிற இந்த மருத்துவ மனைக்கு வருகிற புற நோயாளிகள் உள்ளபடியே மிகவும் அவதிப்படுகிறார்கள். ஆகவே, இந்த மருத்துவ மனையை மேலும் அபிவிருத்தி செய்து அங்கு வருகின்ற புற நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க அரசு வகை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அரசு, நான் முன்னரே சொன்னதைப் போல், பரிசீலனை செய்து கவனிக்கும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, சைதாப்பேட்டையில் உள்ள இந்த மருத்துவ மனைக்கு ஒவ்வொரு நாளும் அதிக அளவில் புற நோயாளிகள் வருகிறார்கள். ஆகவே, இதில் ஒரு நிரந்தர பரிகாரம் காண்பதற்கு அங்கே பணியாற்றுகின்ற டாக்டர்களோடு, இன்னும் கூடுதலாக சில டாக்டர்களையும் இதர மருத்துவப் பணியாளர்களையும் நியமிப்பதற்கு அரசு மறுபரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, கேள்வி திரும்பத் திரும்ப அதேதான்; விடையும் அதேதான்.

Nurses Association

*645 *Q.*—Thiru N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether it is a fact that the Tamil Nadu Government Nurses Association has demanded during 1974 a higher uniform and ration allowance and more selection grade posts; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு அரசு செவிலியர் சங்கம் செவிலியர்களுக்கான உணவுப்படி, சீருடைப்படி உயர்வும், அதிகப்படியான தேர்வு நிலைப் பதவிகள் ஏற்படுத்தவும் கேட்டுள்ளன. ஏற்கெனவே அரசு ஒப்புக்கொண்ட அந்த அடிப்படையில் மேலும் என்ன செய்ய இயலும் என்பது ஆய்வில் உள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

1975 ஏப்ரல் 11]

திரு. என். கே. பழனிசாமி : தலைவர் அவர்களே, முக்கியமாக அவர்கள் அடிப்படைச் சம்பளத்தை ரிவிஷன் செய்யவேண்டும் என்றும், அகவிலைப்படியை ரிவிஷன் செய்யவேண்டும் என்றும் சர்க்காருக்கு விண்ணப்பித்தார்களா ? அதன்மேல் சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஏற்கெனவே ஓரிரு ஆண்டுகளுக்கு முன்னால் அவர்கள் உணவுப்படி என்று வழங்கப்படுகிற படியை உயர்த்துவதற்குப் பதிலாக சம்பளத்தை உயர்த்தவேண்டும் என்று கோரி, ரூ. 275—450 என்ற விகிதத்தில் இருந்த சம்பளம் ரூ. 300—15—420—20—500 என்று உயர்த்தப்பட்டது. அதன்காரணமாக ரேஷன் அலவன்ஸ் பற்றி அவர்கள் கேட்பது முறையல்ல என்ற கருத்து தான் திரும்பத் திரும்பப் பரிசீலனை செய்து, அரசில் உள்ள பல்வேறு துறையினர் தெரிவிக்கிறார்கள். சீருடைப்படியை உயர்த்த முடியுமா என்பது பொருளாதார நிலை காரணமாகப் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. என். மருதாசலம் : தலைவர் அவர்களே, செவிலியர்களுக்கு சுப்ரிம் கோர்ட் என்று அரசு நிர்ணயம் பண்ணியிருக்கிறார்களே, அந்த சுப்ரிம் கோர்ட்டில் இன்னும் சம்பளம் கொடுக்கப்படவில்லை. ஆகவே, உடனடியாகக் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா ? (சிரிப்பு)

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கேள்வி விளக்கமாக இல்லை

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, செவிலியர்களுக்கு தேர்வு நிலைப் பதவிகள் புதிதாக ஏற்படுத்தக் கோரி ஏதாவது முறையீடு வந்ததா ? அதுபற்றி அரசாங்கம் என்ன கருத்தினை அப்பொழுது அறிவித்தது, தற்போது எந்தக் கருத்தில் இருக்கிறது என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தற்போது அப்படிப்பட்ட தேர்வு நிலைப் பதவிகளை அனுமதிக்கவேண்டுமா, அவசியந்தானா என்பது இன்னும் தீர்மானிக்கப் படவில்லை.

திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை : நாகர்கோவில் அரசு தலைமை மருத்துவ மனையில் செவிலியர் பற்றாக்குறை காரணமாக அங்குள்ள நோயாளிகளை சரிவர கவனிக்க முடியவில்லை என்று அங்குள்ள தலைமை மருத்துவ அதிகாரி கூறுகிறார். இதனைப்பற்றி அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு, க. அன்பழகன் : தனியாகக் கேள்வி போட வேண்டும்.

திரு. என். கே. பழனிசாமி: தலைவர் அவர்களே, அவர்கள் ப்ரொமோஷன் விஷயத்தில் சர்க்கார் மிகவும் மெதுவாக இருக்கிறது. நர்சாக வந்தவர்கள் நர்சாகவே இருக்கிறார்கள். அவர்களுக்கு பதவி உயர்வு கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. மேலே இருக்கிறவர்களுக்குத்தான் அதிகமாக ப்ரொமோஷன் கிடைக்கிறதே தவிர கீழே இருக்கிறவர்களுக்கு ப்ரொமோஷன் கிடைப்பதில்லை.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மேலே இருக்கிறவர்களுக்கு ப்ரொமோஷன் கிடைக்கிறது, கீழே இருக்கிறவர்களுக்கு ஏன் ப்ரொமோஷன் கிடைக்கவில்லையென்றால், 'ஸீனியாரிட்டி பை சர்வீஸ்' என்ற அடிப்படையில் மேலே இருக்கிறவர்களுக்குத்தான் ப்ரொமோஷன் வரும். அதிலே ஒன்றும் கருத்து வேற்றுமை இருப்பதற்கில்லை.

திரு. என். மருதாசலம்: சுப்ரிம் கோர்ட் சர்வீஸ் உள்ளவர்களுக்கு......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் உங்களைக் கூப்பிடவே இல்லையே.

Primary Health Centre at Tholyavetty

*646 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Health be pleased to state whether there are proposals under the consideration of the Government to provide a second Primary Health Centre at Tholyavetty in Killiyoor Panchayat Union area?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இல்லை.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, கிள்ளியூர் பஞ்சாயத்து யூனியன் பகுதியில் இருக்கின்ற ப்ரைமரி ஹெல்த் சென்டரை அப்-க்ரேட் செய்து, முப்பது படுக்கைகள் உள்ள ரூரல் ஆஸ்பத்திரியாக உயர்த்தும் திட்டம் இருந்து, அதற்கான ப்ரொபோசல் கிள்ளியூர் பஞ்சாயத்து யூனியன் ஆபீசில் வந்து, அதற்கான ரெகமென்டேஷன் செய்து அனுப்பியிருந்தோம். கிள்ளியூர் பஞ்சாயத்து யூனியன் பகுதியில் கடற்கரையோரத்தில் ஒரு டிஸ்பென்சரி ஏற்படுத்துவதாக கன்யாகுமரி மாவட்ட ஜில்லா அபிவிருத்தி கவுன்சில் கூட்டத்தில் டிஸ்ட்ரிக்ட் மெடிகல் ஆபீசர் கூறினார். அதையும் நடைமுறையில் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: முதலில் கேட்ட கேள்வி—ப்ரைமரி ஹெல்த் சென்டரை முப்பது படுக்கைகள் கொண்ட மருத்துவ மனையாக உயர்த்த முடியுமா என்பது. அந்தத் திட்டம் இருந்தது. ஏறத்தாழ 80, 90 ஆரம்ப சுகாதார நிலையங்கள்